விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 215 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 06 செவ்வாய்க்கிழமை (22.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3473)
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

## 30 நிமிடங்களாக பாடசாலை நேரம் அதிகரிப்பு

### பிரதமர் ஹரிணி அமரசூரிய



(கொழும்பு)

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ் பாடசாலை நேரம் முப்பது நிமிடங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## ஓகஸ்ட் 10

### புலமைப்பரிசில் பரீட்சை

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை)

15ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசில் பரீட்சை இரத்துச் செய்யப்படாது

### பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை இரத்து செய்யப்படாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க


### செம்மணி மனிதப் புதைகுழி

# 7 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின்போது நேற்றுத் திங்கட்கிழமை புதிதாக 7 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)



## மூளாயில் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

மூளாயில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை

15ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் முன்னாள் உறுப்பினர்

### கொழும்பில் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பின்னர்

15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி புதைகுழி விசாரணை

## குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் விசாரணைகள் நேற்று முதல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை, பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழியின் இரண்டாம் கட்ட

15ஆம் பக்கம் பார்க்க

## மனிதப் புதைகுழி அகழ்வுக்கு நிதி நிபுணத்துவத்தை வழங்குங்கள்

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள்

(கொழும்பு)

மனிதப் புதைகுழிகளில் காணப்படும் மனித எச்சங்களை அகழ்வதற்கு அவசியமான நிதி நிபுணத்துவம் மற்றும் வளங்களை இலங்கை அரசு வழங்கவேண்டும் என பரிந்துரைத்துள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தினை ஏற்றுக் கொள்வது குறித்து இலங்கை ஆராயவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

15ஆம் பக்கம் பார்க்க

## கோல் கம்பம் விழுந்ததில் இளைஞன் உயிரிழப்பு

### நாவாந்துறையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

கால்பந்து விளையாடிக் கொண்டிருந்த போது, இளைஞன் மீது கோல் கம்பம் சரிந்து விழுந்ததில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்

16ஆம் பக்கம் பார்க்க

## யாழில் காணி விடுவிப்புத் தொடர்பில்

### மயிலிட்டி மீள்குடியேற்ற பிரதிநிதிகளுடன் அரச அதிபர் பிரதீபன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழில் இராணுவ வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக மயிலிட்டி மீள்குடியேற்ற சங்கப் பிரதிநிதிகளுடன் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கலந்துரையாடியுள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுப்புலம் முருகனுக்கு நாளை தேர்த் திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத் தேர்த் திருவிழா நாளை 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

நாளை காலை விசேட பூசை வழிபாடுகளுடன் வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் முருகன் தேரில் ஆரோகணிப்பார்.

இதேவேளை இன்று 22 ஆம் திகதி முருகனின் வேட்டைத் திருவிழா மண்டைதீவு வேப்பந்திடல் முத்து மாரியம்மன் ஆலயத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறும். (ந)

## பணவீக்கம் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான நாட்டின் முதன்மை பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்தில் 0.3% ஆகக் குறைந்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)


73வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



திரு.சி.தவராசா
(ஓய்வுநிலை உத்தியோகத்தர் - யாழ்.வலயம்)

22 July 2025
Happy Birthday!

வாழ்த்துவோர்:
திரு.திருமதி மதுபாலா
மேனகா (மகள்)
த.நிலக்ஷன் (மகன்)
சகஸ்வினி, பிரஸ்வின்
(பேரப்பிள்ளைகள்)

(4863)



மணி விழாவும் சேவை நலன் பாராட்டும்



எங்கள் பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெற்றுச் செல்லும்

திருமதி மகேந்திரம் ஜெயச்செல்வி
B.Com. Dip in Education
Commerce Trained
(ஆசிரியர் SLTS -I)

Best Wishes!

அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பதோடு அவரது எதிர்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

சேவை விபரம்
1988.08.17 - 1992.01.28 - யா/ கீரிமலை நகுலேஸ்வரா ம.வி.
1992.01.29 - 1994.01.07 - யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை
1994.01.08 - 2014.01.16 - யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை
2014.01.17 - 2016.01.03 - யா/ ஆனைக்கோட்டை றோ.க பாடசாலை
2016.01.04 - 2025.07.22 - யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம்

(C-3467)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை



பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. S.S.A.R. நிலோச்குமார்
(SLPS-2, B.B.A(Hons), PGDE, DSM, M.Ed)

அவர்கள் ஊர்காவற்றுறை
கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு
பெற்றமையை முன்னிட்டு அகமகிழ்கின்றோம்
மேன்மேலும் பல பதவி உயர்வுகள்பெற்று
வாழ்வில் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துவோர்.
ஆசிரியர்கழகம்
யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
கோப்பாய்

(C-3468)



1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27.03.1947
மறைவு 02.08.2024

மட்டுவில் நாடு மேற்கு பூநகரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் இராமலிங்கம் குமாரகுலசிங்கம்
(சமாதான நீதவான்)

நாட்கள் பல கடந்து ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாத உங்கள் நினைவுகள் வருகையில்
நிலை குலைந்து போகின்றோம்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாக போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் நாடு மேற்கு,
பூநகரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(1350)



28ஆவது பிறந்தநாளும்
04ஆம் ஆண்டு நினைவு தினமும்
(22.07.2025)



அமரர் பகீரதன் கிருஷாந்தி


மரணமே வந்தாலும்
உன்னை மறக்காத
இதயம் வேண்டும்
மறு ஜென்மம்
ஒன்று இருந்தால்
அதில் நீயே வேண்டும்
உறவாக மட்டும் அல்ல
என் உயிராக

என்றும் உன் நினைவுகளுடன்
கணவர் - பகீரதன்
செல்லமணி குடும்பத்தினர்
சங்கானை நிச்சாமம்

மலர்வு 22.07.1997
உதிர்வு 05.04.2021

(1351)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி மாட்டுவண்டி மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்- சிவசாந்தன், கஜிந்தன்)

# நேருக்கு நேர் மோதிய பேருந்துகள்- 25 பேர் மருத்துவமனையில்



(கொழும்பு)

கேகாலை, கலிகமுவ பகுதியில் நேற்று அதிகாலை தனியார் பேருந்தும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் சுமார் 25 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆரம்பக் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேகாலை பொலிஸ் பிரிவின் எல்லைக்குட்பட்ட கலிகமுவ பகுதியில், கேகாலையில் இருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த தனியார் பேருந்தும், வேரகொடவிலிருந்து கேகாலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்துமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கேகாலை மற்றும் வரகாபொல வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஙி)

# வாக்களிக்கத் தவறினால் இனி அபராதம்!

## தேர்தல் ஆணைக்குழு அதிரடி

**(கொழும்பு)..................**

**எதிர்காலத் தேர்தல்களில் வாக்காளர்களுக்கான வாக்களிப்பு கட்டாயமாக்கப்படும், வாக்களிக்க தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்க திட்டமிட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் சமன்ஶ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**




குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் நாட்டில் எந்தவிதமான தேர்தலும் நடத்தப்படமாட்டாது .

ஒவ்வொரு தேர்தலுக்கும் செலவாகும் பெரும் நிதியை கருத்தில் கொண்டு, தேர்தல்களில் அதிகபட்ச பலனை பெறும் நோக்குடன் சில முக்கிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் தேர்தல்களுக்கு மனுத்தாக்கல் செய்யும் போது செலுத்த வேண்டிய கட்டுப்பணத் தொகையை உயர்த்தும் வாய்ப்பும் இருப்பதாக தெரிவித்தார்.

நாட்டில் எதிர்கால தேர்தல்களுக்காக புதிய சட்டங்களை உருவாக்குவது மிக அவசியம் என்றும், தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டுள்ளதால் அவை எளிதில் நிறைவேற்ற முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஙி)

# கோழி இறைச்சி விலை சடுதியாக அதிகரிப்பு



(கொழும்பு)

கோழி இறைச்சியின் விலை தற்போது அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

இதன்படி, ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1,300 ரூபாவை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோழி இறைச்சி விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையங்களில் 1,100 ரூபா, 1,200 என பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் தற்போது கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுவதில்லை.

எனவே, கோழி இறைச்சிக்கு உரிய விலையை நிர்ணயித்து விற்பனை செய்வதுடன், விலையையும் குறைக்குமாறு நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இந்த விலை உயர்வு குறித்து இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர, வார இறுதியில் கோழி இறைச்சியின் விலை ஓரளவு அதிகரித்ததாக தெரிவித்தார். (ஙி)

# கல்விச் சீர்திருத்தங்களால் மாணவர்கள் மீதான சுமை அதிகரிப்பு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள கல்விச் சீர்திருத்தங்கள் மாணவர்கள் மீதான சுமையை மேலும் அதிகரிக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். தற்போதைய கல்வி முறை மாணவர்களுக்கு மிகவும் சுமையாகியுள்ளமையால், அனைத்து கல்விசார் தொழிற்சங்கங்களும் தொடர்ந்து சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றன.

எனினும், உண்மையான மாற்றத்திற்குப் பதிலாக, அரசாங்கம் பழைய கொள்கைகளை மீண்டும் தொகுத்து புதிய சீர்திருத்தங்களாக முன்வைப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கு முன்னர் கல்வி நிபுணர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் போன்ற தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்க அரசாங்கம் தவறியுள்ளது.

பாடசாலை நேரத்தை மதியம் 1:30 முதல் மதியம் 2 மணி வரை நீடிக்கும் தீர்மானம் எந்தவித ஆலோசனையும் இல்லாமல் எடுக்கப்பட்டுள்ளது என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடரில் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 16 வயதிற்குட்பட்ட அணியும் 20 வயதிற்குட்பட்ட அணியும் சம்பியனைக் கைப்பற்றியுள்ளன.

# மாகாண உடற்பயிற்சி போட்டியில் இளவாலை கன்னியர் மடம் சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி 8 வருடங்களின் பின்னர் மகுடம் சூடி சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி 8 வருடங்களின் பின்னர் தமது அபாரமான திறமையை வெளிப்படுத்தி முதலாமிடத்தையும், இரண்டாம் இடத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியும், மூன்றாம் இடத்தை கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் மகா வித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த உடற்பயிற்சி வீராங்கனையாக இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி தலைவர் எல்.ஏஞ்சல் தெரிவு செய்யப்பட்டார். (3-90)

வரும் 3 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிகளை 2027, 2029, 2031 ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இது வரை இங்கிலாந்தில் நடந்த 3 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிகளும் சிறப்பாக நடந்ததுடன் நல்ல வரவேற்பையும் பெற்றதால் இங் கிலாந்து கிரிக்கெட் வாரியத்துக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (3)

ICC

# கனடாவின் ஓபன் டென்னிஸ்; முன்னணி வீரர்கள் விலகல்



உலக முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் கனடா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அங்குள்ள டொரண்டோ நகரில் அடுத்த வாரம் தொடங்குகிறது.

இந்நிலையில், நம்பர் 1 வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர், நம்பர் 5 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மற்றும் பிரிட்டனின் ஜாக் டிராபர் ஆகியோர் இந்தத் தொடரில் இருந்து விலகி உள்ளனர்.

காயம் காரணமாக கனடா ஓபன் தொடரில் விளையாடவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 2023ஆம் ஆண்டில் கனடா ஓபன் டென்னிசில் ஜானிக் சின்னர் சம்பியன் பட்டம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)


# மணி விழா வாழ்த்து

## திருமதி.வித்தியா நகுலேந்திரன்
## ஆசிரியை
## யா/திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை



**சேவை விபரம்**

யா/நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்
26.03.1990 - 14.02.2001

யா/நாரந்தனை றோ.க.த.க.பாடசாலை
15.02.2001 - 04.10.2006

யா/நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க.பாடசாலை
05.10.2006 - 07.09.2008

யா/புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்
08.09.2008 - 19.05.2011

யா/புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்
20.05.2011 - 13.03.2012

யா/நல்லூர் ஞானோதய வித்தியாலயம்
14.03.2012 - 25.05.2017

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
26.05.2017 - 13.02.2022

யா/திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை
14.02.2022 - 21.07.2025

*எமது பள்ளிச் சிறார்களுக்கு அரிய கல்வியினை ஆர்வமுடன் ஊட்டி தம் கடமை தவறாது கருத்துடன் நாளும் தம்பணி முடித்து இன்று மணி விழாக் காணும் மகிழ்ச்சியான நன்னாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பாடசாலைச் சமூகம்
யா/திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை


## யாழில் ...

மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்க பிரதிநிதிகள் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களை நேற்றுக் காலை 10.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மயிலிட்டி மீள்குடியேற்ற சங்க பிரதிநிதிகள் கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் குறித்த விடயம் சம்பந்தமாக அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதன் அங்கமாக மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களை சந்தித்து வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த தன்மையை வெளிக்காட்டி அதனை வர்த்தமானி அறிவித்தலில் இருந்து நீக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் காணி விடுவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன் அதற்கமைய கட்டம் கட்டமாக காணி விடுவிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது யாழ் மாவட்ட காணி விடுவிப்பு தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டதாகவும் மற்றும் பலாலி வீதியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டதற்கமைய அவ்வீதித் தடை அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்த 234 ஏக்கர் காணிகள் விவசாயத் தேவைகளுக்காக மாத்திரம் விடுவிக்கப்பட்டிருப்பதாவும் குடியிருப்புக்காக அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன், மீள்குடியேற்ற கிளை உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்ற சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், தாய்மார் கழகங்கள் இணைந்து நடத்திய இளையோர் சுகநலக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நடைபவனி என்பன வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் நேற்று திங்கட்கிழமை நடை பெற்றது.

# உரமானியக் கொடுப்பனவு வழங்குவதற்கான பதிவுகள்

(சாவகச்சேரி)

நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெற்செய் கையாளர்களுக்கான 2025-2026 ஆம் ஆண்டிற்கான உர மானியக் கொடுப்பனவு வழங்கு வதற்கான பதிவுகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

இரு தினங்களும் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை பதிவுகள் நாவற் குழி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறும் எனவும் பதிவுகளுக்கு வரும் நெற்செய்கையாளர்கள் தேசிய அடையாள அட்டை, நடப்பாண்டிற்கான ஏக்கர் வரி செலுத்திய சிட்டை, வங் கிப் புத்தகம் மற்றும் சந்தா பணம் செலுத்திய பற்றுச் சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு கமக்கார அமைப்பி னர் கேட்டுக்கொண்டுள்ள னர். (8-30)

# வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத் தில் ஆடி அமாவாசை நிகழ்வு கள் நாளை மறுதினம் வியாழக் கிழமை நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகரால யத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று காலை 6.45 மணி க்கு வசந்த மண்டபப் பூசை யும் அதனைத் தொடர்ந்து தீர்த்தவாரியும் இடம்பெறவுள் ளது.

அத்துடன் தீர்த்தவாரி முடி வுற்ற பின் காலை 8.30 மணி யளவில் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளதாக ஆலய தர்ம கர்த்தா இ.குமாரவடிவேல் அறிவித்துள்ளார். (3)

# கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக திருமதி.அஜிதா பிரதீபன் பொறுப்பேற்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செய லக மேலதிக அரசாங்க அதி பராக (காணி) திருமதி.அஜிதா பிரதீபன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற் றார்.

கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில், மாவட்ட பதில் அர சாங்க அதிபர் எஸ்.முரளிதரன் முன்னிலையில், காலை 9.02 மணிக்கு அவர் தனது கடமை களை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

நல்லூர் பிரதேச செயல கத்தின் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வந்த நிலையிலேயே இவர் மேலதிக அரசாங்க அதிப ராக(காணி) நியமிக்கப்பட்டுள் ளார்.

கிளிநொச்சி மாவட்ட மேல திக அரசாங்க அதிபராக (காணி) கடமையாற்றிய இ.நளாஜினி கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து, அவரது இடத்துக்கு பி.அஜிதா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக அரசாங்க அதிப ராக (காணி) கடமையேற்ற பி.அஜிதா, முன்னர் பதவி ஸ்ரீபுர, கிண்ணியா, பருத்தித் துறை, நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப் பிர தேச செயலாளராகவும் கடமை யாற்றியுள்ளார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட பொறியியலாளர், கணக்காளர், மாவட்ட புள்ளிவிபரவியலாளர், மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (8)

# புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவுகள் சங்கத்தின் புதிய நிர்வாகம் யாழ்ப்பா ணத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்து ரையாடலில் தெரிவு செய்யப் பட்டது.

இதன்படி வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோரின் உற வுகள் சங்கத்தின் தலை வராக யோகராசா கனக ரஞ்சினியும் செயலாளராக சிவானந்தன் ஜெனிற்றாவும் பொருளாளராக கதிர்காம நாதன் கோகிலவாணி யும் தெரிவு செய்யப்பட்ட னர். (8-33)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3331


ஹரிஸ்





ரித்திகா




சுகந்தன்




கரினா




ஹர்சனா




மிதுனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று வறுமையால் போசாக்கின்மை இன்று வசதியால் போசாக்கின்மை

## ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அன்று வறுமையால்தான் போசாக்கின்மை எம்மிடத்தே தலைதூக்கியிருந்தது. இன்று வசதிபடைத்தோரும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களின் உணவுப் பழக்கத்தை ஆக்கிரமித்திருக்கும் துரித உணவுகளால் இந்தப் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், தாய்மார் கழகங்கள் இணைந்து நடத்திய இளையோர் சுகநலக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நடைபவனி என்பன வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய மாணவர்களின் மேம்பாட்டுக்காக, இளைய சமூகத்தை வழிப்படுத் துவதற்காக சுகாதாரத்துறை யினர் மாத்திரமல்ல ஏனைய துறையினரும் ஒன்றிணைய வேண்டும். ஏனெனில், இன் றைய பாடசாலை மாணவர்கள் மாலை நேரங்களில் விளையாடுவதென்பது குறைவு. ஒன்றில் தனியார் கல்வி நிலை யம் அல்லது கைப்பேசியில் என்கின்ற நிலையிலேயே அவர்களது வாழ்க்கை இருக் கின்றது. எனவே, இளை யோரின் நலன் தொடர்பில் அதிக பொறுப்பு பெற்றோரிடமே இருக்கின்றது எனத் தெரி வித்தார். (8)

## பனைசார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பனை எழுச்சி வாரத்தினை முன்னிட்டு வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வட மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்தும் "எங்கள் வாழ்வியலில் பனை" என்ற தொனிப் பொருளில் பனை சார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கழமை வரை காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம் பெறவுள்ளது.

வட மாகாண கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமாகிய ந. திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருத்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்ப் பாணம்- கிளிநொச்சி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், வட மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா- முருகேசன் மற்றும் வட மாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் மு. நந்தகோபாலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு கலந்தாய்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)




இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்முயற்சியில் "பத்திரிகை, கதை சொல்லல் மற்றும் தொழில்நுட்பம்" என்ற தலைப்பில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் சிறப்பு உரையாடல் நிகழ்வு ஒன்று நடைபெற்றது.இதன்போது நவீன ஊட கங்களின் வளர்ச்சியோடு இணைந்து கதை சொல்லல் முறை, பத்திரிகையாளர்களின் பங்கு, மற்றும் தொழில்நுட்பத்தின் இடையூறு மற்றும் ஆதரவு ஆகியவை குறித்து விரிவான விவாதங்கள் முன்னெடுக்கப்பட்டன. நிகழ்வில் யாழ்ப்பாணத் திற்கான இந்தியத் துணைத் தூதர்,தூதரக அதிகாரிகள், இந்திய மற்றும் வடக்கு மாகாண பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், தகவல் தொடர்பு மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப ஆர்வலர்கள் கலந்து கொண்டு தங்களின் பார்வைகளைப் பகிர்ந்து கொண்டனர். இத்தகைய உரையாடல் கள் யாழ்ப்பாண இளைஞர்களுக்குப் புதிய சிந்தனைகளைத் தூண்டும் என்றும், பத்திரிகைத் துறையில் புதுமை யான கதை சொல்லல் நுட்பங்கள் வளர்ச்சியடைய உதவும் என்று இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் சுட்டிக் காட்டியிருந்தனர். நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியல் சார்ந்தவர்களுக்கு தூதரகத்தால் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. (8-30)

# கசூரினா கடற்கரையில் திடீரென பற்றிய தீ சவுக்கு மரங்கள் பல தீயில் எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரையை அண்மித்த பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு திடீரென தீ விபத்து நிகழ்ந்துள்ளது.

காரைநகர் கசூரினா கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 9 மணிய ளவில் தீ பரவியுள்ளது. கடற்கரைப் பகுதிகளில் திடீரென பரவிய தீயால் கடற்கரைக்கு அருகிலுள்ள சவுக்கு மரங்கள், பனை மரங்கள், புற்கள் என்பன தீயில் கருகி நாசமாகியுள்ளன. தீப்பரவல் ஏற்பட்டதை அவதானித்த பிரதேச மக்கள் பொலிஸாருக்கும் கடற்படையினருக்கும் தகவல் வழங்கினர்.

தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் கடற்படையினரும் பிரதேச சபையினரும் தண்ணீர் பவுசர்கள் மூலம் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் கடற்கரைப் பகுதிகளிலுள்ள பல சவுக்கு மரங்கள், புற்தரைகள் தீயில் கருகி நாசமாகியுள்ளன.

பல மணிநேரத்தின் பின்னர் அதிகாலை 2 மணி யளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீப்பரவலுக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8)

## குப்பையுடன் செல்லும் வாகனங்கள்

# மூடப்பட்டிருக்க வேண்டும்

## மீறி செயற்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் – உதவி மேயர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட கழிவகற்றல் உழவு இயந்திரங்கள் குப்பைகளை ஏற்றிச் செல்லும் போது 'நெற்' கொண்டு மூடப்படாமல் சென்றால் மக்கள் மநாகர சபைக்கு அறிவித்தால் அது தொடர்பில் உரியவர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநாகர சபையின் உதவி மேயர் இ.தயாளன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அவர், கழிவகற்றல் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் கழிவகற்றல் வாகனங்கள் சரியான முறையில் மூடியிடாமல் கொண்டு சென்றது உண்மை. ஆயினும் நாங்கள் மாநகர சபை பொறுப்புக்களை ஏற்றவு டன் அது தொடர்பில் விசேட கவனம் எடுத்து கண்டிப்பான அறிவுறுத்தல்களை மேற்கொண்டிருந்தோம்.

இதனால் தற்போது உரிய முறையிலான கழிவகற்றலே நடைபெறுகின்றது. ஒரு வேளை யாழ். மாநகர சபைக்கு சொந்தமான கழிவகற்றல் வாகனங்கள் கழிவுகளைக் கொண்டு செல்லும் போது மூடிடாமல் கொண்டு சென்றால் எமக்கு (மாநகர சபை) அறிவியுங்கள் நாம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறோம் என அவர் தெரிவித்தார். (க-நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 250 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 500 | 350 | 450 |
| தக்காளி | 200 | 200 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 280 | 200 | 250 |
| கோவா | 300 | 400 | 400 | 250 | 350 |
| கரட் | 450 | 450 | 500 | 350 | 450 |
| பூசணி | 100 | 140 | 120 | 100 | 150 |
| புடோல் | 80 | 100 | 150 | 100 | 160 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 250-350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 450 | 600 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 120 | 120 | 200 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 450 | 350 | 250 | 400 | 300 |
| லீக்ஸ் | 350 | 280 | 300 | 230 | 300 |
| பீற்றூட் | 200 | 150 | 250 | 120 | 200 |
| கறிமிளகாய் | 400 | 700 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 600 | 400 | 350 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 420 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 50 | 60-120 | 80-100 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 120 | 80-130 | 140-180 |
| இராசவள்ளி | 650 | 650 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 300 | 400 |
| முள்ளங்கி | 150 | 140 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 140 | 80 | -- | 160 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 6 வயதிற்கு உட்பட்ட சிறார்கள் கையடக்கத் தொலைபேசிகளை கையாள பெற்றோர் அனுமதிக்கக் கூடாது!



(கொழும்பு)

**நாட்டிலுள்ள ஆறு வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியர் கையடக்கத் தொலைபேசிகளைக் கையாளுவதற்குப் பெற்றோர் அனுமதிக்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

குறித்த விடயத்தினை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் வலியுறுத்தியுள்ளார்.

விஹாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கையடக்கத் தொலைபேசி பயன்பாடு இளம் பராயத்தினர் மீது ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கத்தை அவர் இதன்போது எடுத்துரைத்தார்.

மேலும் ஆரம்ப வயதுகளில் திரை செயற்பாட்டை விட, கற்றல், சமூக தொடர்பு மற்றும் விளையாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கோரியுள்ளார். (நி)

# பயணிகளின் உயிருடன் விளையாடிய பேருந்து சாரதி

## பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாவலப்பிட்டி - வரகாவ பகுதியில் உள்ள தொடருந்து கடவை மூடப் பட்டிருந்த நிலையில், ஆபத்தைக் கருத்திற் கொள்ளாது அதனூடாக பேருந்தை செலுத்திய குற்றச்சாட்டில் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை - லக்ஷபான பகுதியிலிருந்து கண்டி நோக்கிப் பயணிக்கும் தனியார் பேருந்தின் சாரதியே கைதாகியுள்ளார்.

குறித்த பேருந்து நாவலப்பிட்டி - வரகாவ தொடருந்து கடவைக்கு அருகில் பயணித்த போது தொடருந்து பாதுகாப்பு கடவை மூடப்பட்டிருந்தது.

இருப்பினும், பேருந்து சாரதி வலது பக்கமாகத் திரும்பி எதிர்த்திசையிலிருந்து வாகனங்கள் பயணிக்கும் பாதையின், சிறிய இடை வெளி ஊடாக பேருந்தைச் செலுத்தியுள்ளார்.

குறித்த வழியாக பேருந்து சென்ற சிறிது நேரத்தில், கண்டியிலிருந்து நாவலப்பிட்டிக்கு பயணிகள் தொடருந்து சென்றுள்ளது.

இந்த நிலையிலேயே, சம்பவம் தொடர்பாகத் தொடருந்து நிலைய காவலர் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில், பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)

# அம்பாந்தோட்டையில் மீண்டும் உப்பு உற்பத்தி

(அம்பாந்தோட்டை)

18 மாதங்களுக்குப் பிறகு லங்கா உப்பு நிறுவனம் அம்பாந்தோட்டையில் உப்பு உற்பத்தியை மீண்டும் தொடங்கியுள்ளது.

இந்த முறை எதிர்பார்க்கப்படும் உப்பு உற்பத்தி 40,000 மெற்றிக் தொன் என்று லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி.நந்தன திலக தெரிவித்துள்ளார்.

வானிலைகாரணமாக 18 மாதங்களுக்கு முன்பு அம்பாந்தோட்டையில் உப்பு உற்பத்தியை நிறுத்த நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதனை தொடர்ந்து, நேற்றுக் காலை உப்பு உற்பத்தி மீண்டும் தொடங்கியுள்ளது.

கடந்த ஆண்டு ஒரு இலட்சம் மெற்றிக் தொன் உப்பு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 40,000 மெற்றிக் தொன் உப்பு மட்டுமே பெறப்பட்டது.

அம்பாந்தோட்டை மகாலேவாவிலும் இன்று உப்பு அறுவடை தொடங்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திரு மணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.

யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்

(முன்பதிவு செய்து வரவும்)

(4826)


# முட்டை விலையை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் முட்டை விலையை குறைக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின் இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது உள்ள விலை யிலிருந்து, மேலும் இரண்டு ரூபாய் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (நி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

19, தாவளை 2 ஆம் வீதி, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் -01, தாவளை 2ஆம் வீதியிலுள்ள இல: 19 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **V.சோமசுந்தரம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் முழு ஆதனத்தினை **குமாரவேலு பூலோகசுந்தரம்பிள்ளை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5672/24.02.2004 ஆம் இலக்க உறுதியால் **பரமநாதன் விக்னேசன்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த **குமாரவேலு பூலோகசுந்தரம்பிள்ளை** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரது பிள்ளைகளான **பூலோகசுந்தரம்பிள்ளை கிருபைதாஸ், பூலோகசுந்தரம்பிள்ளை சிவயோகன், பூலோகசுந்தரம்பிள்ளை கமலராஜன், சண்முகராசா ரூபராசன் பெண் சர்மினி** ஆகியவர்களுக்கு முதுசமாக சென்றடைந்தது.

**புவனேந்திரன் ஜெயதர்சன்** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினைப் பிரசித்த நொத்தாரிசு தர்மசுகி காசிநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 130/27.01.2021ஆம் இலக்க உறுதியாலும் **புவனேந்திரன் சுபாகரன்** ஆகியவர் குறித்த ஆதனத்தில் மற்றொரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு தர்மசுகி காசிநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 131/27.01.2021 ஆம் இலக்க உறுதியாலும் குறித்த **பூலோகசுந்தரம்பிள்ளை கிருபைதாஸ், பூலோகசுந்தரம்பிள்ளை சிவயோகன், பூலோகசுந்தரம்பிள்ளை கமலராஜன், சண்முகராசா ரூபராசனும் பெண் சர்மினியும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **புவனேந்திரன் ஜெயதர்சனும், புவனேந்திரன் சுபாகரனும்** ஆகியவர்கள் தத்தமது ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **புவனேந்திரன் ஜெயதர்சனும், புவனேந்திரன் சுபாகரனும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன்இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

## ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancy:

- **Teacher - Chemistry (English/ Tamil Medium) A/L Classes**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 04th August 2025 to the address below. Only shortlisted candidates will be called for an interview.

Kindly indicate the post you are applying for at the top left hand corner of the envelope.

**The Principal**
**St. John's College**
**Jaffna**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 2ஆம் உலகப் போர் வீரர் ஜேக் லார்சன் காலமானார்



(வோஷிங்டன்)

இரண்டாம் உலகப் போரின் வீரரும், "பாப்பா ஜேக்" என்று அழைக்கப்படும் டிக் டொக் பிரபலமுமான ஜேக் லார்சன் காலமானார்.

அவர் தனது 102 ஆவது வயதில் காலமானார்.

ஜேக் லார்சன் அமெரிக்க இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு இராணுவ வீரர் ஆவார்.

இவரது டிக் டொக் கணக்கை 1.2 மில்லியன் பேர் பின் தொடர்கின்றனர்.

அவர் இறப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் எம்மி விருதையும் வென்றுள்ளார். (நி)



## அமெரிக்காவிற்கு அடி

## ரஷ்யா வெளியிட்ட அ


(மொஸ்கோ) ●●●●●●●●●●●●●●

**உக்ரைனுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட ரஷ்யா தயாராக உள்ளதாக ரஷ்ய ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

போர் நிறுத்தத்திற்கு செல்லாவிட்டால் ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதித்து ரஷ்யாவை தனிமைப்படுத்தப்படும் என எச்சரித்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில், உக்ரைன் விவகாரத்தில் அமைதியைக் கடைப்பிடித்து விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதே தனது விருப்பம் என ஜனாதிபதி விளாடிமிர் புடின் பலமுறை தெரிவித்துவிட்டார்.

## விபத்தில் சிக்கிய அஜித்தின் கார்



(வத்திக்கான்)

இத்தாலியில் நடைபெற்று வரும் GT4 யூரோபியன் சிற்றூந்து பந்தயத்தில், நடிகர் அஜித்குமார் செலுத்திய சிற்றூந்து விபத்தில் சிக்கியுள்ளது.

பந்தயத்தின் போது வேகமாக, வளைவில் திரும்பும் தருணத்தில், இடைநடுவில் பழுதாகி நின்றிருந்த மற்றொரு சிற்றூந்துடன், அஜித்தின் சிற்றூந்து மோதி விபத்துக்குள்ளானது.

எவ்வாறாயினும், அதிஷ்டவசமாக அஜித்குமார் எந்தக் காயமுமின்றி, உயிர்தப்பியுள்ளார்.

விபத்து நடந்த உடனேயே சிதறியிருந்த சிற்றூந்தின் பாகங்களை அகற்றிய ஊழியர்களுடன் சேர்ந்து, அஜித்தும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். (நி)

## ஹொங்கொங்கில் சூறாவளி 400 விமானங்கள் ரத்து!

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் ஏற்பட்டுள்ள "விபா" சூறாவளியால் மணிக்கு 160 கி.மீ வேகத்தில் காற்று வீசியது. இதனால் 400 இற்கும் மேற்பட்ட விமானங்கள் நேற்று ரத்து செய்யப்பட்டன.

சீனாவின் சிறப்பு நிர்வாக பிரதேசமாக ஹொங்கொங் உள்ளது. இங்கு "விபா" சூறாவளி நேற்று முன்தினம் கடும் சேதத்தை ஏற்படுத்தியது.

மேற்கு பசுபிக் பகுதியில் உருவான "விபா" சூறாவளி ஹொங்கொங் கரையில் இருந்து 50 கி.மீ தொலைவில் கடந்து சென்றது.

இதனால் மணிக்கு 140 முதல் 170 கி.மீ வேகத்தில் காற்று வீசியது. இதனால் மரங்கள் விழுந்தன. முக்கிய சாலைகளில் மழைநீர் தேங்கியது.

விமான சேவையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. சூறாவளி காற்றால் 400 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால், 80,000 பயணிகள் பாதிக்கப்பட்டனர். (நி)



## ஜப்பான் மேற்ச
### பெரும்பான்மையை இ



(டோக்கியோ)

ஜப்பானின் மேற்சபையில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளமை அந்த நாட்டு அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் பிரதமர் சிகேரு இசிபா பதவி விலகும் எண்ணம் எதுவுமில்லை என தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கும் விலைகள் அமெரிக்காவின் வரி அதிகரிப்பு குறித்த அச்சுறுத்தல் போன்றவற்றினால் ஆளும்கட்சி மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...பணிந்தாரா புடின்?

### ...அறிவிப்பு



இதை அவ்வளவு எளிதில் கையாள முடியாது. கடுமையான முயற்சிகள் மற்றும் நீண்ட நடைமுறையின் மூலமே நிறைவேற்ற முடியும். உக்ரைனுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட ரஷ்யா தயாராகவுள்ளது.

ஆனால், ரஷ்யா நிர்ணயித்த இலக்குகளை அடையாமல் இதைச் சாத்தியப்படுத்த முடியாது. அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உக்ரைனுடனான போரை 50 நாட்களுக்குள் நிறுத்தவில்லை என்றால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தென்கொரியாவில் கனமழை

### 17 பேர் உயிரிழப்பு



(சியோல்)

தென் கொரியாவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி இதுவரையில் 17 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தென் கொரியாவில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து கனமழை கொட்டி வருகிறது.

இதனால் அந்நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தெற்கு சுங்க்சோங் மாகாணம், குவாங்ஜு நகரம் வெள்ளம், நிலச்சரிவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.


கேப்யோங் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் வீடுகள் மற்றும் நிவாரண முகாம்கள் மூழ்கி, கனமழையின் மத்தியில் வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் 2 பேர் இறந்துள்ளனர்.

மழை தொடங்கியதிலிருந்து 11 பேர் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது. வெள்ளம் சூழ்ந்த பகுதியில் வசிக்கும் மக்கள் மழை காரணமாக 13,000இற்கும் மேற்பட்டோர் இடம்பெயர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது. (நி)

## ...சபைத் தேர்தல்

### ...இழந்தது ஆளும் கட்சி




அதிருப்தியில் உள்ள மக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மிகவும் கடுமையான போட்டி நிலவிய தேர்தலில் வாக்களித்தனர்.

248 உறுப்பினர்கள் கொண்ட மேற்சபையில் தனது கட்டுப்பாட்டைத் தக்க வைப்பதற்கு ஆளும் கட்சிக்கு 50 ஆசனங்கள் தேவைப்பட்ட நிலையில் அந்த கட்சி 47 ஆசனங்களை மாத்திரம் பெற்றுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான அரசமைப்பு ஜனநாயக கட்சி 22 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. மேற்சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு வருடங்கள்.

ஜப்பான் பாராளுமன்றத்தின் கீழ்சபையில் ஏற்கனவே பெரும்பான்மையை இழந்துள்ள நிலையிலேயே ஆளும் கட்சி மேற்சபையிலும் பெரும்பான்மையை இழந்துள்ளது.

இதேவேளை மிகவும்கடுமையான தேர்தல் முடிவை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதாக 68 வயது பிரதமர் சிகேரு இசிபா தெரிவித்துள்ளார். (நி)



## பயணிகள் கப்பலில் தீப்பரவல்!

### ❖ ஐவர் உயிரிழப்பு

### ❖ 150 பேர் உயிருடன் மீட்பு



இந்தோனேசியாவின் வடக்கு சுலவேசி மாகாணத்தில் பயணிகள் கப்பல் ஒன்று தீப்பிடித்ததில் சுமார் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

சுமார் 150 பேர் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 1 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, தீப்பரவல் ஏற்பட்ட வேளையில், சுமார் 280 பேர் கப்பலிலிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு - 2025

## – ஓர் விமர்சனப் பார்வை

விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு ஆராய்ச்சி, நினைவு மற்றும் மறுமலர்ச்சி நோக்கங்களுடன் 2025 யூலை மாதம் 11, 12 ஆகிய திகதிகளில் இரண்டு நாட்கள் நடைபெற்றன. முதல் நாள் ஆராய்ச்சி மாநாட்டிற்காகவும், இரண்டாவது நாள் பாரம்பரிய, கலாசார நிகழ்ச்சிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இந்த ஆராய்ச்சி மாநாடு கிராம மட்டத்தில் நடத்தப்பட்டது. அனைத்துத் துறைகளிலும் விடத்தல் தீவின் வரலாறு மற்றும் அதன் பாரம்பரியத்தை புத்தகங்கள், இணையத் தளங்கள் மூலம் உலகிற்கு அறிமுகப் படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இதற்காக ஒரு நிரந்தர வலைத் தளம் ஆரம்பிக்கப்பட்டது. மூன்று புத்தகங்கள் - மாநாட்டு சிறப்பு இதழ் (380 பக்கங்கள்), ஆராய்ச்சி புத்தக தொகுதி ஒன்று மற்றும் இரண்டு (1000 பக்கங்கள்) புத்தகங்கள் முதல் நாளில் வெளியிடப்பட்டன.

மாநாட்டின் முதல் நாள், மன்னாரின் வரலாற்றுச் சிறப்புமிக்க கடற்கரை கிராமமான விடத்தல்தீவின் மாநாடு, மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்து.

முதல் நாள் மாநாடு அன்பான வரவேற்பு மற்றும் பதிவுகளுடன் தொடங்கியது. அங்கு பங்கேற்பாளர்கள் பகிரப்பட்ட நினைவுகள் மற்றும் எதிர்காலப் பார்வையின் உணர்வில் பங்கேற்றிருந்தனர்.

தொடக்க விழாவை திரு. மரியாம் பிள்ளை மரியசெல்வம் தலைமை தாங்கி நடத்தினார்.

பாரம்பரிய மேளம் - நாதஸ்வர தாளங்கள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளால் வழிநடத்தப்பட்ட ஆரம்ப வரவேற்பில் மன்னார் நகரப் பகுதியில் இருந்து அழைக் கப்பட்ட விருந்தினர்கள் பாரம்பரிய முறையில் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அருட்தந்தை டெஸ்மான் அஞ்சலோ மற்றும் மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் ஜெயசீலன் ஞானசீலன் ஆகியோர் இதயப்பூர்வமான வரவேற்புரையுடன் விழாவை ஆரம்பித்தனர். திருமதி. டெனிஸ்ரின் சுபாஸ் சந்திரன் அவர்களது நெறியாள்கையில் வரவேற்பு நடனம் நடைபெற்றது. திரு.அ.நீல் ஆம்ஸ்ரோங்கின். ஆத்மார்த்தமான விடத்தல்தீவு காணொளி பாடல் கிராமத்தின் வரலாறு மற்றும் மீள்தன்மையை பெரிய திரையில் உயிர்ப்பித்தது. அதனைச் சிலுவைராசா ஞானராஜ் ஒளிப்பதிவு செய்திருந்தார். எங்கள் கிராமத்தைப் பற்றிய மற்றொரு தரமான காணொளி பாடலை திரு.அந்தோனிப்பிள்ளை. அனுரா சேவியர் இசையமைத்து பாடியிருந்தார்.

மாநாட்டின் தலைவரான பேராசிரியர் ஜெயசீலன் ஞானசீலன் தனது தொடக்க உரையில், சமூகத்தின் வலிமையையும், கடந்த கால போராட்டங்களை எதிர்கால அபிலாஷைகளுடன் இணைப்பதன் முக்கியத்துவத்தையும் நினைவுபடுத்தினார். இந்த நிகழ்வில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் அ. செல்வம் அடைக்கலநாதனின் சிறப்பு விருந்தினர் உரை இடம்பெற்றது. கிராமத்தின் மறக்கப்பட்ட வரலாறுகள் மற்றும் கதைகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான முயற்சியை அவர் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

முதல் நாள் ஆராய்ச்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் அழைக்கப்பட்டிருந்தார். மேலும், வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மூத்த பேராசிரியர் ஏ. அற்புதராஜா, இணையம் வழியாக வாழ்த்து உரையை நிகழ்த்தினார்.

காலை அமர்வுகளில் பேராசிரியர் நெவிஸ் மொரைஸ், ஜனாப் அப்துல் வாஹித் மற்றும் கலாநிதி எஸ். விஜயமோகன் ஆகியோரின் சிந்தனையைத் தூண்டும் முக்கிய உரைகள் இடம்பெற்றன. அவை விடத்தல்தீவின் சமூக-பொருளாதார, கல்வி மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை உள்ளடக்கியது.

தொடர்ந்து வயலின் (ஞானமணி மரிய ஜெனிஸ்ரின்), கிற்றார் (நீல் ஆம்ஸ்ரோங்) மற்றும் பியானோ (மரியசெல்வம் செரீனா அஞ்சலீனா அவர்களும் செல்வி நயோமி, மற்றும் பி. பெடின் பெனோ ஆகியோரின் இசையுடன் கூடிய குறுகிய இசை நிகழ்வுகள் ஆத்மார்த்தமான தொனியைக் கொடுத்தன.

இதற்கிடையில், இரண்டாவது அரங்கம் கிராமத்தின் கடல்சார் பாரம்பரியம் பல்லுயிர் பெருக்கம், விளையாட்டு மரபுகள், புலம்பெயர்ந்தோர் தொடர்புகள் மற்றும் உள்ளூர் பொருளாதாரங்கள் பற்றிய விவாதங்களால் பரபரப்பாக இருந்தது.

விடத்தல்தீவின் நீடித்த பொருளாதார ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களைக் கவனத்திற்கு கொண்டு வந்தது. பல நூற்றாண்டுகளாக விவசாயம், மீன்பிடித் தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் வழியாக ஊன்றியுள்ள மீள்தன்மையுடன், கிராமத்தின் பொருளாதாரம் உயிர்வாழ்வும் புதுமையும் கலந்து விரிந்துள்ள வரலாற்றைக் கூறியது.

ஆராய்ச்சி கட்டுரை எழுத்தாளர்களின் பேச்சாளர்களின் பெயர்கள் இவை: சண்முகசுந்தரம் விஜயமோகன், மாணிக்க வாசகர் சிறீஸ்கந்தராஜா, ஜெயசீலன் ஞானசீலன், டிலுசன் பயஸ், சூசைதாஸ் சுஜன், சதீஸ்குமார் பத்மநாதன், சுதாமதி விஸ்வலிங்கம், எட்வின் அமல்ராஜ் இம்மானுவேல், சுஜப் எம். காசிம், சிலுவைராசா பொனிப்பாஸ், எம்.இஸட். எம்.ஸக்கி, ஜனகராணி ஜெகநாதன், சூசைப்பிள்ளை டக்ளஸ், ருகானி மசாகிராகனி, ஜெயதீபன் நடராஜா, சந்தியாப்பிள்ளை சாந்தகுமார், நிக்கோலா இம்மானுவேல், ஜமாலுதீன் முர்சலீன், ஜேம்ஸ் சுதாகரன், அல்வின் கமல்ராஜ் இம்மானுவெல், அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங், ஜேசு நேசன் டினுசாந்த், முகமது அப்துல் காதர் அமீன், எமிலியனுஸ் பிள்ளை டெலிஸ்ரன் நிசாந், முகமது அப்துல் காதர் அமீன், முஹம்மது காசிம் சுஜப், மேரி சுஜாதா ஜோண்சன், சூசைதாஸ் சுயந்தன், அந்தோனிப்பிள்ளை அனுரா சேவியர், கிறிஸ்டின் கியோமர் பயஸ், தங்கதுரை, ஜெனற் தனுஜா கீர்த்திசீலன், கீதபொன்கலன் லொயிஸ் நிஷ்கலன், எம்.ஐ. அனீஸ், கிருஸ்னானந்த செல்வன் அர்ஜுனன் , தனபாலசிங்கம் கீர்த்தனாராம், மீரா சாஹிபு தமீம், அருளானந்தம் லோரன்ஸ், மசனெட் எட்வேட் சுதர்சன், மீரா சாஹுபு நஜமுதீன், குளத்தான் முஜம்மில், புஸ்பராசா யூட் ஆனந்தகுமார், சோமசுந்தரம் கனகேந்திரா, நான்சி லொயிஸ் நிஷ்கலன், தவசீலன் ஞானசீலன், குணசீலன் ஞானசீலன், ஜோசப் சரோஜினி, தேவதாசன் ஆன் சித்திரா, றொபேட் சார்லஸ் லெற்றீசியா, அலோசியஸ் அமல்ராஜ், டெனிஸ்ரின் சுபாஸ் சந்திரன், சுபோஜினி அருள் ஜெயக்குமார், கரோலின் விஜயசந்திரன் அன்ரனிஸ், ஜோன்சன் கியோமர் பயஸ், மரியாம்பிள்ளை மரியசெல்வம், சாந்தசீலன் ஞானசீலன், மெனெற் தனுஷா தோமை செல்வா, சவேரிதாசன் செல்ரன் யூடிற்.

ஒவ்வொரு பங்களிப்பாளரின் முயற்சிகளும் அங்கீகரிக்கப்படுவதை ஏற்பாட்டுக் குழு உறுதி செய்தது.

விடத்தல்தீவு பன்னாட்டு மாநாட்டின் இரண்டாம் நாள் கலாசார நிகழ்வுகள் 12.07.2025 சனிக்கிழமை இடம்பெற்றது.

கலாசார நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வாக பன்னாட்டு மாநாட்டின் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும், விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் நகர சபை தவிசாளர் டானியேல் வசந்தன், மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஞானப்பிரகாசம் பிறேம்குமார் அவர்களும் வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிரியல் அறிவியல் துறைத்தலைவர், தெற்காசிய வனவிலங்கு நிபுணர் கலாநிதி எஸ்.விஜயமோகன், முன்னாள் கணிதத்துறை திட்ட அதிகாரி ஜனாப் அப்துல் வாஹித், விடத்தல்தீவு அலிஹார் மகாவித்தியாலய அதிபர் ஜனாப் முஜம்மில், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொருளாதார பேராசிரியர் கலாநிதி நேவிஸ் மொறாயஸ், பிரித்தானியாவில் வசிப்பவரான சோமசுந்தரம் இராசேந்திரா, பன்னாட்டு மாநாட்டின் நிதிக்குழு தலைவரும் நோர்வே தேசத்தில் வசிப்பவருமான திரு.இம்மனுவேல் எட்வின் அமல்றாஜ், விடத்தல்தீவு பன்னாட்டு மாநாட்டு நிதிக்குழு செயலாளர் திரு.மரியாம்பிள்ளை மரியசெல்வம், விடத்தல்தீவு பன்னாட்டு மாநாட்டு அழைப்பிதழ் குழுவின் தலைவர் , விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அதிபர் திரு.ஜோண்சன் கியோமர் பயஸ், ஜோசப்வாஸ் நகர பங்குத்தந்தை அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளார், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் பிறேம்குமார், அருட்பணி இராயப்பு அகஸ்ரின் புஸ்பராஜா அடிகளார், புனித டிலாசால் சபை அருட்சகோதரர் சுவக்கீன். ஸ்ரனிஸ்லொஸ், அருட்சகோதரி ஜெயமலர் உள்ளிட்ட பிரமுகர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதர்கள் மற்றும் அருட்சகோதரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



மௌன இறைவணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது வரவேற்புரையை வவுனியா மறைக் கோட்ட முதல்வரும் வேப்பம்குளம் பங்குத்தந்தையும் விடத்தல்தீவு கிராமத்தைச் சேர்ந்த அருட்பணியாளருமான அருட்பணி எ.டெஸ்மன் அஞ்சலோ அவர்கள் ஆற்றியிருந்தார்.

தொடர்ந்து மன்னார் நலன்புரிச் சங்கம் பிரான்சு அமைப்பினால் விடத்தல்தீவு பன்னாட்டு மாநாட்டிற்கு வாழ்த்துகள் தெரிவித்து அனுப்பப்பட்ட வாழ்த்து மடலை அருட்பணியாளருமான அருட்பணி ஜெறி குயின்ரஸ் அடிகளார் வாசித்தளித்ததுடன் விடத்தல்தீவு மண்ணின் முதலாவது வைத்தியரான கலாநிதி கிறிசோஸ்ரொம் சத்தியசீலன் அவர்களால் அனுப்பப்பட்ட வாழ்த்துமடலை பன்னாட்டு மாநாட்டின் நிதிக்குழு தலைவர் திரு.இம்மனுவேல் எட்வின் அமல்றாஜ் அவர்கள் வாசித்தளித்தார்.

தொடர்ந்து பல்துறை கலைஞர்களான



அந்தோனிப்பிள்ளை அனுரா சேவியர் மற்றும் அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங் ஆகியோரின் இயக்கத்தில் உருவான விடத்தல்தீவை மையப்படுத்திய அதன் அருமை பெருமைகளை வெளிக்கொணரும் வகையில் இரு பாடல்கள் திரையில் வெளியிடப்பட்டன.

தொடர்ந்து வரவேற்பு நடனம் ஜோசப்வாஸ்நகர் ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றத்தின் நெறியாள்கையின் கீழ் அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் இஸ்லாமியப் பாடல் இடம்பெற்றது. இஸ்லாமியாப் பாடலை விடத்தல்தீவு அலிஹார் மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கியதுடன் பாடலை ஜனாப் முஜம்மில் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார். தொடர்ந்து செல்வி அருந்தவநாதன் சுதர்சினி அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டு இந்து சமய பாடலுக்கு நடனம் விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகாவித்தியாலய மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது.

அதன் பின்னர் நோர்வே தேசத்தில் வசிக்கும் திரு.அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங் அவர்களால் கிட்டார் இசையுடன் பாடல் பாடப்பட்டது. தொடர்ந்து ஏரோது நாட்டுக்கூத்து காட்சியை சித்தரிக்கும் வகையில் தனிநபர் ஆற்றுகையாக திரு.அந்தோனிமுத்து. எலியாஸ் அவர்களால் சிறப்புக் காட்சி ஆற்றுகை செய்யப்பட்டது. அந்த ஆற்றுகையில் கட்டியகாரனாக சிறுவன் டெ. ஓவியன் அஞ்சலோ அவர்களும் பாத்திர மேற்றிருந்தார். அதனை தொடர்ந்து வயலின் இசையை ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றம் ஜோசப்வாஸ் நகர் சார்பில் வயலின் ஆசிரியர் திருமதி றாஜ்குமார் மரிய ஜெனிஸ்ரின் அவர்கள் வழங்கியிருந்தார்.

அதனை தொடர்ந்து திருமதி. S .F நிவ்றா மற்றும் திருமதி. A.றவீக்கா ஆகியோரால் நெறியாழ்கை செய்யப்பட்ட இஸ்லாமிய நடனம் விடத்தல்தீவு அலிஹார் மகாவித்தியாலய மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டது. பின்னர் அடுத்த நிகழ்வாக பழைய சுமை என்ற தலைப்பில் நாட்டிய நடனமானது ஜோசப்வாஸ்நகர் ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றத்தினரால் ஆற்றுகை செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து பியானோ இசையை விடத்தல்தீவு மண்ணின் செல்வி மரியசெல்வம் செறீனா அஞ்சலீனா அவர்களும் செல்வி. நயோமி அவர்களும் வழங்கியிருந்தனர். பின்னர் விடத்தல்தீவு கலைஞர்களால் கும்மி நடனம் ஆற்றுகை செய்யப்பட்டது. கும்மி நடனத்தை பல்துறை கலை வித்தகர் அந்தோனிப்பிள்ளை அனுரா சேவியர் அவர்கள் நெறியாழ்கை செய்திருந்தார். அதனை தொடர்ந்து கராத்தே ஆசிரியரரான திரு.மத்தியாஸ் அன்ரனி இன்பராஜ் அவர்களது கராத்தே மாணவர்களால் கராத்தே கண்காட்சி செய்முறை நிகழ்வு நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து பல்துறை கலைஞன் அந்தோனிப்பிள்ளை அனுரா சேவியர் அவர்களது நெறியாள்கையில் விடத்தல்

**(11ம் பக்கம் பார்க்க)** (சி-3466)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தல்தீவு 10 ஆம் பக்க தொடர்ச்சி...

தீவு கலைஞர்களால் கோலாட்டம் நிகழ்ச்சி இடம்பெற்றது.

தொடர்ந்து ஜோசப்வாஸ்நகர் ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றத்தினரால் குழுப்பாடல் இசைக்கப்பட்டது. இப் பாடலை திரு. அ. அனுரா சேவியர் அவர்கள் எழுதி மெட்டமைத்ததுடன் திருமதி டெனிஸ்ரின் சுபாஸ்சந்திரன் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார்.

அதனை தொடர்ந்து அடுத்த நிகழ் வாக விடத்தல்தீவு கலைஞர்களால் "மூலைக்கல்" (திராட்சை தோட்ட உவமை) என்ற தலைப்பில் நாட்டுக்கூத்து ஆற்றுகை செய்யப்பட்டது. இவ் நாட்டுக் கூத்தை பெ.அந்தோனிகுரூஸ் அவர்களும், ம.அற்புதசீலன் அவர்களும், ச.யாகப்பு அவர்களும் நெறியாள்கை செய்திருந்தனர்.

பின்னர் பாவோதல் திருக்குறளை செல்வன் ஓவியன் அஞ்சலோ டெலிஸ்ரன் நிசாந் அவர்கள் ஜோசப்வாஸ்நகர் ஆயர் இராயப்புஜோசப் கலாமன்றத்தின் சார்பில் ஆற்றுகை செய்திருந்தார். அதனை தொடர்ந்து தாள லயம் ஜோசப்வாஸ் நகர் ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றத்தால் ஆற்றுகை செய்யப்பட்டது.

தாள லயத்தை விடத்தல்தீவு மைந்தனும் அருட்பணியாளருமான அருட்பணி மரியசெல்வன், பிராங்டஃப் அவர்கள் நெறியாழ்கை செய்திருந்தார். தாள லயத்தை தொடர்ந்து கவிதை அரங்கம் விடத்தல்தீவு கவிஞர் மசாஹிரா கனி மற்றும் அவரது குழுவினரால் ஆற்றுகை செய்யப்பட்டது.

அடுத்த நிகழ்வாக ஆங்கில மொழி குழுப்பாடல் ஜோசப்வாஸ் நகர் ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றத்தினரால் திருமதி சுபாஸ்சந்திரன் டெனிஸ்ரின் அவர்களது நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது.

தொடர்ந்து கலப்பு நடனம் ஜோசப்வாஸ் நகர் ஆயர் இராயப்பு ஜோசப் கலாமன்றத்தினரால் அரங்கேற்றப்பட்டது. இதில் குறத்தி நடனத்தினை A.சல்மியா அவர்களும் உழவர் மற்றும் கும்மி நடனத்தினை செல்வி கீர்த்தி சீலன் ஜெனட் தனுஜா மற்றும் செல்வி ஜோண்சன் மேரி சுஜாதா ஆகியோரும் நெறியாள்கை செய்திருந்தனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளின் இறுதி நிகழ்வாக ஜோசப்வாஸ் நகர் ஆயர் ஜோசப் கலாமன்ற கலைஞர்களால் அண் ணாவி திரு.மாசிலாமணி கிளமென்ற் அவர்களது நெறியாள்கையில் "விடத்தல் தீவு வாழ் மும்மத மக்களின் வாழ்க்கை முறையின் ஒற்றுமை" என்ற நாட்டுக்கூத்து ஆற்றுகை செய்யப்பட்டது.

ஈற்றில் திரு.அருளப்பு நீல் ஆம்ஸ்ரோங் தலைமையில் திரு. திருஞானசெல்வம் சவேரிதாஸ் அவர்களது இசை குழுவின் கரோக்கே பாடல் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகளை திரு.இம்மனுவேல் எட்வின் அமல்றாஜ் அவர்களும் திரு.ஜோண்சன் கியோமர் பயஸ் அவர்களும், தொகுத்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக நன்றி உரையை தொடர்ந்து அருட்பணி எ.டெஸ்மன் அஞ்சலோ அடிகளாரது இறைவணக்கத்துடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன.

**ஏற்பாட்டுக்குழு**
**விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு - 2025**

## ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாட்டிற்குள்

(கொழும்பு)

இலங்கையில் ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் பரவல் 95 சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2,500 பண்ணைகளில் 67,000 பன்றிகள் உயிரிழந்துள்ளன. அத்துடன், பல பன்றிகள் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நாடளாவிய ரீதியிலுள்ள பாதிக்கப்பட்ட பண்ணைகளில் 251 பண்ணைகள் தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1996- இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>6இல் சூரி செவ்<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: Bsc, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15827 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, Civil Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15834 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>7இல் செவ்<br>கி-பா-29 1/2<br>உயரம்:5"<br>தகைமை/தொழில்-A/L, Cleark<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15828 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்- விசாகம்<br>1 இல் செவ்<br>உயரம்: 5'10"<br>கி-பா-17 1/2<br>தகைமை/தொழில்: HNDE, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15837 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>கி-பா-45<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:O/L,கடை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15829 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்-பரணி<br>1இல் செவ்<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: Engineer (Swiss)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: G/15840 |
| பிறப்பு: 1998- இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி-பா- 36<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்-Bsc,Supermarket (London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15831 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா:18 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் - DIP IN Computer, Store Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15844 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி-பா- 11<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: College, BCom, Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (only London)<br>தொ.இ: B/15833 | பிறப்பு-1981-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>12 இல் சூரிசெவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் - A/L, Gov work<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15851 |

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


# இராசிபலன்

22.07.2025
ஆடி 06, செவ்வாய்க்கிழமை
துவாதசி காலை 6.51 மணிவரை
திரயோதசி பின்னிரவு 4.52 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 7.59 மணிவரை
சுப நேரம் 10.31 - 12.01 மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்.

**வளவன்**

**மேஷம்**
செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
நிதி நிலை உயரும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் கூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்**
தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்**
செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**கன்னி**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**துலாம்**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கிடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், புதிய முயற்சிக்கு உறுதுணை புரியும் நாள்.

**விருச்சிகம்**
வரவும் செலவும் சமமாகும் நாள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**தனுசு**
குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், சுவாரஸ்யம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**மீனம்**
ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தொழில் ரீதியாக வர வேண்டிய பணவரவு கிடைக்கலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும், பயணங்களால் பலனுண்டு.

**சிறு துன்பங்கள் வாய் திறந்து பெருந்துன்பங்கள் ஊமையாக இருக்கும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 827





என்று கோபமாகக் கேட்டாள். எனக்கு யாரும் சொல்லவில்லை. நானாகத்தான் சொன்னேன். உன் மனதில் அத்தகைய ஆசை இல்லாவிட்டால் நல்லதாய்ப் போயிற்று. நான் சொன்னதை மறந்துவிடு!" என்றான் சேந்தன் அமுதன்.

சற்று நேரம் அந்தப் படகில் மௌனம் குடி கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் துடுப்பினால் படகு தள்ளும் சத்தமும், வறட்டுத் தவளைகளின் குரலும், கடல் பறவைகளின் ஒலியும் கடல் அலைகளின் ஓசையும் அவ்வப்போது கீழ்த் திசைகளில் இடி முழக்கமும் கேட்டுக் கொண்டிருந்தன.

சேந்தன் அமுதன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மனத்தையும் தைரியப்படுத்திக் கொண்டு "பூங்குழலி! என் அந்தரங்கத்தை வந்தியத்தேவன் உன்னிடம் வெளியிட்டதாகக் கூறினாய் அல்லவா? அதைப் பற்றி உன் கருத்தைத் தெரிவித்தால் நல்லது. அதோ கோடிக்கரையின் கலங்கரைவிளக்கம் தெரிகிறது. இனி உன்னோடு தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிட்டாமற் போகலாம். நாளை நானும் புறப்பட்டுச் செல்ல வேண்டும். தஞ்சையில் என் தாயாரைத் தனியாக விட்டு வந்து வெகு நாளாகிறது!" என்றான்.

"வந்தியத்தேவன் உனக்காக ஏன் தூது செல்ல வேண்டும்? உனக்கு வாய் இல்லையா? கேட்க வேண்டியதை நேரில் கேட்டு விடேன்!" என்றாள் பூங்குழலி.

"சரி! கேட்கிறேன் நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வாயா?" என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

"எதற்காக என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி கேட்கிறாய்?" என்றாள் பூங்குழலி.

"உன் பேரில் எனக்கு அந்தரங்கமான ஆசை இருக்கிறது அதனாலேதான்!"

"அந்தரங்கமான ஆசையிருந்தால் கலியாணம் செய்து கொண்டுதான் தீர வேண்டுமா?"

"அப்படியொன்றும் தீர வேண்டும் என்பதில்லை உலக வழக்கம் அப்படி இருந்து வருகிறது.."

"உன்னைக் கலியாணம் செய்து கொண்டால் எனக்கு நீ என்ன தருவாய்? நான் வேண்டும் அரண்மனை வாழ்வும், ஆடை ஆபரணங்களும், யானை குதிரைகளும், பல்லக்கும் பணிப்பெண்களும் உன்னால் தர முடியுமா?"

"முடியாது அவற்றுக் கெல்லாம் மேலான அமைதியுள்ள வாழ்க்கையைத் தருவேன். கேள், பூங்குழலி! தஞ்சை நகர்ப்புறத்திலுள்ள அழகான பூந்தோட்டத்தின் மத்தியில் என் குடிசை இருக்கிறது. அதில் என் அன்னையும் நானுந்தான் வசிக்கிறோம். நீ அங்கு வந்து விட்டாயானால், உன் வாழ்க்கையே மாறுதல் அடைந்துவிடும் என் அன்னை உன்னை அன்போடு வைத்து ஆதரித்துப் பாதுகாப்பாள். பொழுது விடிந்ததும் எழுந்திருந்து, நம் வீட்டைச் சுற்றியுள்ள கொடிகளிலும், மரங்களிலும் குலுங்கும் மலர்களை இருவரும் சேர்ந்து சித்திர விசித்திரமான மாலைகளாகக் கட்டலாம். மாலைகளை நான் தஞ்சைத் தளிக்குளத்தார் ஆலயத்துக்கும், துர்க்கா பரமேசுவரியின் ஆலயத்துக்கும் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வருவேன்.

அதற்குள் நீ எங்கள் தோட்டத்திலுள்ள தாமரைக் குளத்தில் குளித்துவிட்டு என் அன்னைக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்யலாம். மாலை நேரங்களில் நாம் மூவரும் தாமரைக் குளத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு போய்ப் பூச்செடிகளுக்கு ஊற்றலாம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உயிரைக்காப்பாற்றிய வைத்தியம்



(நேற்றைய தொடர்ச்சி)

அருகில் வரிக்குதிரையின் குட்டி அம்மாவை காப்பாற்ற முடியாமல் கதறிக் கொண்டிருந்தது.

இதை பார்த்த வைத்தியர் மான் குட்டி சுந்தர், நேராகப் புலியிடம் சென்று நீங்கள் செய்வது நியாயம் இல்லை, ஒரு குட்டியை வைத்திருக்கும் தாயை கொல்லலாமா? என்று கேட்டது.

நீ யாரடா என்னை கேட்பது? என்று மிரட்டியது புலி. ஐயா நான் இந்தக் காட்டின் வைத்தியர் என்று சொன்னது. உடனே புலி வைத்தியரா? என்று மேலும் கீழும் பார்த்தது. உங்களுக்கு சந்தேகம் என்றால் நம் கரடியாரிடம் கேளுங்கள் என்று சொன்னது மான் குட்டி சுந்தர். அதெல்லாம் வேண்டாம், நான் இந்த வரிக்குதிரையை என் குட்டிகளுக்கு கொண்டு போகலாம் என்று இருந்தேன். நீ வைத்தியர் என்றால் எனக்கு காரியம் ஒன்று ஆக வேண்டி இருக்கிறது. அங்கு என் குட்டிகளில் ஒன்று இரண்டு நாட்களாக ஒன்றும் சாப்பிடாமல் இருக்கிறான், அவனைக் கவனிக்க வேண்டும், வருகிறாயா? நான் வருகிறேன், ஆனால் இந்த வரிக்குதிரையை நீங்கள் விட்டு விட வேண்டும். சரி உனக்காக இல்லை, உன் வைத்தியத்துக்காக இந்த வரிக்குதிரையை, விட்டு விடுகிறேன். சொன்னதும் அதன் பிடியில் இருந்து தப்பித்த வரிக்குதிரை மான் குட்டி சுந்தரிடம் வந்து மிக்க நன்றி! ஆனால் நீ அதன் இடத்துக்கு போய் மாட்டிக் கொள்ளப் போகிறாய் என்று எனக்கு கவலையாக இருக்கிறது என்றது. என்னைப் பற்றி கவலைப்படாதே. நீ சீக்கிரம் உன் குட்டியை இங்கிருந்து கூட்டிக் கொண்டு போய் விடு என்றது.

புலியுடன் அவர் குகைக்கு சென்ற மான் குட்டி சுந்தர் அங்கு இருந்த புலிக்குட்டியில் ஒன்றுக்கு கடுமையான சுரம் வந்திருப்பதைக் கண்டு கொண்டது. உடனே புலியாரிடம் ஐயா, உங்கள் குட்டிகளில் ஒன்றுக்கு கடுமையான சுரம் வந்துள்ளது. இதற்கு மருந்து மூலிகையாக என்னிடம் உள்ளது. ஆனால் நீங்கள் இதன் இலைகளை சாப்பிடமாட்டீர்கள், அதனால் நான் ஒரு உபாயம் சொல்கிறேன் என்று அங்கிருந்த ஒரு குட்டைக்கு சென்றது. அதில் அந்த மூலிகையை நன்கு கசக்கி அந்த தண்ணீரில் கலக்கி விட்டது. இப்பொழுது அந்தக் குட்டியை அந்த தண்ணீரை பருக சொன்னது.

இப்படியே இரண்டு முறை மருந்தை கலக்கி தண்ணீரைக் குடிக்க வைத்ததால் காய்ச்சல் கொஞ்சம் குணமாகி அந்தக் குட்டி எழுந்து நட மாட ஆரம்பித்தது. புலிக்கு ஒரே சந்தோசம். மான் குட்டி சுந்தரை பார்த்து உன்னை கடைசியில் அடித்து சாப்பிட்டு விடலாம் என்று நினைத்தேன். ஆனால் நீ ஒரு திறமையான வைத்தியன் என்று நிருபித்து விட்டாய். உன்னை நான் கொல்ல நினைப்பது பாவம், என்னை போல மற்ற விலங்கு களுக்கும் உன்னால் முடிந்த அளவு வைத்தியம் செய்து காப்பாற்று, என்று கூறி அதனை மகிழ்வுடன் வழி அனுப்பி வைத்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டு மென்பதே உண்மையான போராட்டம்.
– சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நயினை நாகபூசணி ஆலய பரிபாலன சபையினருக்கு...

64 சக்தி பீடங்களில் ஒன்றெனப் போற்றப் படும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் எங்கள் வரலாற்றுத் தொன்மையின் சான்றா தாரம்.

அலைகடல் நடுவே வீற்றிருந்து ஆட்சி செய்கின்ற நயினை நாக பரமேஸ்வரியாள் எமக்கெல்லாம் அமுதளிக்கும் தாய்.

அதனாலன்றோ வருடம் 365 நாளும் நயினை நாகபூசணித் தாயார் அங்கு வரும் அடியார்க்கெல்லாம் அமுதளித்து வருகின்றார்.

ஆழ்கடல் மத்தியில் இருக்கக்கூடிய ஆலயத்தில் எந்நாளும் அமுதளிப்பதென்பது சாதாரணவிடயமல்ல.

எனவே நாள்தோறும் அமுதளிக்கும் அப் பெரும் கைங்கரியம் இடையறாது நடக்கிற தெனில், அதற்கு நாகபூசணித் தாயாரின் அருளாட்சியன்றி, வேறில்லை என்பது நிறுதிட்டமான உண்மை என்ற செய்தியோடு; நயினை நாகபூசணி அம்மன் ஆலய பரிபா லன சபையினரிடம் ஒரு வேண்டுதலை முன் வைக்க விளைகின்றோம்.

வட மாகாணத்தின் கல்வி நிலை குறித்து நாம் அனைவரும் கவலை கொண்டுள்ளோம். அதிலும் எங்கள் தீவக மாணவர்களின் நிலைமை மிகவும் கவலை தருகிறது.

அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கக் கூடிய தீவகத்தில் கல்வி கற்கின்ற மாணவர் களின் நிலை குறித்து நாம் அனைவரும் கவ னமாகச் சிந்திக்க வேண்டும்.

ஆம், இப்போது நம் மாணவர்களின் கல் விப் பெறுபேற்றில் பாடசாலைக் கல்விக்கு மேலாக, தனியார் கல்வி நிறுவனங்கள் கணிசமான வகிபங்கைக் கொண்டுள்ளன.

இதைவிட, வசதி படைத்த பெற்றோர்கள் பிரத்தியேக வகுப்புகளையும் ஏற்பாடு செய்து தங்களின் பிள்ளைகள் கற்பதற்கு உதவுகின்ற னர்.

ஆனால் எங்கள் தீவகத்தில் குடியிருக் கின்ற மாணவர்கள் தனித்து பாடசாலைக் கல்வியை மட்டுமே நம்பியிருக்கின்றனர்.

பாடசாலைக் கல்விக்கு அப்பால், தனியார் கல்வி நிறுவனங்களில் படிப்பு, அலகுப் பரீட்சை, கடந்த கால வினாத்தாள் பயிற்சி என்றவாறு பொதுப் பரீட்சைக்காக இடம்பெறு கின்ற தயார்படுத்தல்கள் மத்தியில், தனித்து பாடசாலைக் கல்வியில் மட்டும் தங்கியிருக் கக்கூடிய தீவக மாணவர்களால் பரீட்சையில் உரிய இலக்கை அடைய முடியாமல் போகிறது.

எனவே தீவகத்திலுள்ள அனைத்து மாண வர்களும் பாடசாலைக் கல்விக்கு மேலாக, தனியார் கல்வி நிறுவனங்களின் கற்பித்தல் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதோ வொரு வகையில் நயினை நாகபூசணி அம் மன் ஆலய பரிபாலன சபை உதவி செய்ய வேண்டும்.

ஆம், அடியார்களின் மிகப்பெரும் காணிக் கைகளைப் பெற்றுக் கொள்கின்ற நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபை, தீவக மாணவர்களின் கல்வி அபிவிருத் திக்கான குழுவொன்றை அமைத்து, அதன் மூலம் தீவக மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்குகின்ற கல்வியையும் பெறுவதற்கு உதவுமாக இருந்தால், எங்கள் தீவக மாணவர்கள் நிச்சயம் சாதனை படைப் பார்கள்.

அதேவேளை அரச அமைப்புகள் அனைத் தாலும் ஒதுக்கப்பட்ட தீவக மாணவர்களுக்கு நீங்கள் விசேடமான கல்வியை வழங்கினால், அன்னை நாகபூசணியாள் நிச்சயம் மகிழ் வாள். ஆக தயவு செய்து தீவக மாணவர்க ளுக்கு உதவுங்கள்.

# மக்களின் பேராதரவுடன் அநுர அரசை விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி சூளுரை

மக்களின் ஆணை க்கு மாறாகச் செயற் படும் அநுர அரசை மக் களின் பேராதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு அனுப்பிவைப்போம் என ஐக்கிய மக்கள் சக் தியின் பொதுச்செயலா ளர் ரஞ்சித் மத்தும பண் டார எம்.பி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசு ஆட்சி க்கு வந்ததால் மக்களு க்கு எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை.

அநுர தரப்பினர் தேர் தல் காலத்தில் மக்களு க்கு வழங்கிய வாக்கு றுதிகள் அனைத்தும் பொய்யானவை என்று தற்போது நிரூபணமாகி யுள்ளன.

ஏழை மக்களின் வயிற் றில் அடிக்கும் செயற் பாடுகளையே இந்த அரசு தொடர்ந்து முன் னெடுத்து வருகின்றது.

மக்களின் ஆணை க்கு மாறாகச் செயற்ப டும் இந்த அரசை மக் களின் பேராதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு அனுப்பிவைப்போம்.

ஐக்கிய மக்கள் சக் தியை ஆட்சிப்பீடத்தில் மக்கள் அமர்த்துவார் கள். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் குறுகிய கால த்தில் மக்களின் அனை த்துப் பிரச்சினைகளுக் கும் தீர்வு காண்போம் என்றார். (ம-7)

# 2026 ஏப்ரல் முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

இலத்திரனியல் தேசிய அடையாள அட் டைகள் (இ-என்ஐசி) ஏப் ரல் 2026க்குள் வழங்கப் படும் என்று எதிர்பார்க் கப்படுகிறது என்று டிஜி ட்டல் பொருளாதாரத் துணை அமைச்சர் எர ங்க வீரரத்ன தெரிவித் தார்.

டிஜிட்டல் ஐடி அமை ப்பை நிறுவுவதை நோக் கமாகக் கொண்டு, ஐடி செயல்முறையை டிஜிட் டல் மயமாக்கும் திட்டம் 2012 இல் தொடங்கப் பட்டதாக அவர் கூறி னார்.

பிளாஸ்டிக் அடை யாள அட்டைகளின் தற் போதைய பயன்பாடு சுற் றுச்சூழல் அமைப்பை எதிர்மறையாக பாதிக்கி றது என்பதை வீரரத்ன எடுத்துரைத்தார். மேலும் டிஜிட்டல் அடையாள தளத்திற்கு மாற வேண் டியதன் அவசியத்தை யும் குறிப்பிட்டார்.

இந்த அமைப்பு MOSI செயல்படுத்தல் தீர்வு மூலம் இலங்கையின் ஐடி பதிவு செயல் முறையைத் தனிப்பய னாக்க வடிவமைக்கப் பட்டுள்ளது.

இருப்பினும் டிஜிட் டல் ஐடி இப்போது வேக மாக உருவாகி வருவதா லும் பாதுகாப்பான மற் றும் திறமையான ஐடி தளத்தை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிப்ப தாலும் மாடுலர் ஓப்பன் சோர்ஸ் ஐடென்டிட்டி பிளாட்ஃபார்ம் (MOSIP) போன்ற ஒரு அமைப்பு அவசியம் என்றார். (ம-7)

# கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு

## ஒருவர் காயம்

கம்பஹா சீதுவை, ராஜபக்ஷபுரவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தில் ஒருவர் காயம டைந்து மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

ராஜபக்ஷபுர 12வது சந்து பகுதியில் 21ஆம் திகதி திங்கட்கிழமை துப்பாக்கிச் சூடு நடந் துள்ளது.

மோட்டார் சைக்கி ளில் வந்த இருவர் துப் பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றதா கத் தெரிவிக்கப்படுகி றது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

சீதுவைப் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

# மாணவர் பாராளுமன்றம்

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்ற அமர்வானது நாளை புதன்கிழமை (23) காலை 9.00 மணியளவில் வித்தி யாலயப் பிரதான மண்ட பத்தில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவ ட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சசீலன் அவர்கள் கலந்து சிறப் பிக்கவுள்ளார். (ம-7)

# நாடு முழுவதும் சுற்றிவளைப்பு ஒரே நாளில் 1,241 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக் கையில் சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் தொட ர்பான குற்றங்களுக்காக ஆயிரத்து 241 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சுற்றிவளை ப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன் னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைக ளின்போது 2 இலட்சத்து 54 ஆயிரத்து 679 மில்லி கிராம் ஐஸ், ஒரு இலட் சத்து 12 ஆயிரத்து 567 மில்லிகிராம் ஹெரோ யின் மற்றும் 37 இலட் சத்து 38 ஆயிரத்து 356 மில்லிகிராம் கஞ்சா பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் 21 ஆயிரத்து 132 நபர்கள், 7 ஆயிரத்து 922 வாகனங்கள் மற்றும் 6 ஆயிரத்து 545 மோட் டார் சைக்கிள்கள் சோதனை செய்யப்பட் டன.

இதன்போது வெளி நாட்டில் தயாரிக்கப்பட் டவை உட்பட ஐந்து துப் பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட 18 நபர்களும் பல்வேறு குற் றங்களுக்காக 321 பிடி யாணைகள் பிறப்பிக் கப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டனர். (ம-7)

# பனாகடுவ வாவியில் மூழ்கி இருவர் பலி

இரத்தினபுரி உடவ ளவை பனாகடுவ வாவி யில் நேற்று மீன் பிடித் துக்கொண்டிருந்த இளை ஞர்கள் இருவர் நீரில் மூழ்கி காணாமல் போன நிலையில் ஒருவர் சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

இருவரும் நீரில் மூழ் கியதை அவதானித்த பிரதேச வாசியொருவர் பொலிஸாருக்குத் தக வல் வழங்கியதனைத் தொடர்ந்து, எம்பிலிப் பிட்டிய பொலிஸார் மற் றும் இராணுவத்தின் உயிர்காக்கும் அதிகாரி கள் சம்பவ இடத்துக்கு விரைந்து மீட்பு நடவடிக் கைகளை முன்னெடுத் திருந்தனர்.

இதன்போது அவர் களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் மற்றைய நபரின் சட லத்தைத் தேடும் நடவ டிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நீரில் மூழ்கி உயிரி ழந்த இருவரும் அதே பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 30 வயதுடைய இளைஞர்கள் என எம் பிலிப்பிட்டிய பொலிஸா ரின் ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள் ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 19

சொக்கன்

கண்ணெதிரே அவர்களுடைய கம்பீரமான புனித அடையாளம் தகர்த்து எறியப்பட்டுவிட்டது. கடைசியில் மிஞ்சியது இந்தச் சுவர்மட்டும்தான்.

அதன்பிறகு உலகம் முழுக்க இருக்கிற யூதர்களுக்கு இந்தச் சுவர் வணக்கத்துக்குரிய மதச் சின்னமாகிவிட்டது. என்றைக்காவது இந்த ஆலயத்தை மீண்டும் முழுவதுமாகக் கட்டித்தருவதற்கு ஒரு தேவ தூதன் வருவான் என்று அவர்கள் நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.

கோவில் இருக்கட்டும் அதற்கு முன்னால் அந்தச் சுவர் உள்ள நிலம் யாருக்குச் சொந்தம்? அங்கேதான் பிரச்சினை ஆரம்பித்தது.


ஜெருசலேம் நகரம் இருப்பது பாலஸ்தீனத்தில். அங்கே பெரும்பான்மையாக வாழ்வது அரேபியர்கள்தான்.

காலம் காலமாக அரேபியர்களின் தேசம் என்று அறியப்பட்டிருந்த பாலஸ்தீனத்திற்குள் அப்போது யூதர்கள் பெரும் எண்ணிக்கையில் குடியேறிக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த மண்ணின் மைந்தர்களுக்கு டென்ஷன் அதிகரித்தது. ஏதாவது சூழ்ச்சி செய்து யூதர்கள் தங்களுடைய நாட்டைச் சுருட்டிக் கொண்டு விடுவார்களோ என்று பயப்பட ஆரம்பித்தார்கள்.

இதனால் பாலஸ்தீனத்தில் யூதர்கள் நாலு பேர் சாதாரணமாகச் சேர்ந்து உட்கார்ந்து டீ சாப்பிட்டால் கூட அவர்கள் ஏதோ சதி பண்ணுகிறார்களோ என்று அரேபியர்களுக்கு வயிற்றைக் கலக்கியது.

இந்தப் பயலுங்களைக் கொஞ்சம் தட்டி வைக்க வேண்டும் இல்லாட்டி முதலுக்கே மோசமாயிடும் என்று பேசத் தொடங்கினார்கள்.

அரேபியர்களின் இந்தப் பாதுகாப்பில்லாத உணர்வினால் (Insecurity) அப்போது



பாலஸ்தீனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அப்பாவி யூதர்களுக்குக் கூட ஆபத்து வந்து சேர்ந்தது. நல்லவன், கெட்டவன் என்றெல்லாம் பார்க்காதே யூதனா? போட்டுத் தள்ளு அவ்வளவு தான்!

இப்படித்தான் அன்றைக்கு ஜெருசலேம் புனிதச் சுவரின் முன்னால் வழிபாட்டுக்காகக் கூடியிருந்த யூதர்கள் மீது திடீர்த் தாக்குதல் தொடங்கியது. எங்கிருந்தோ கற்கள், கட்டைகள், பாட்டில்கள் மற்ற இன்ஸ்டண்ட் ஆயுதங்கள் பறந்து வந்தன. அமைதியாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த பல யூதர்கள் அடிபட்டுக் கீழே சாய்ந்தார்கள்.

ஆரம்பத்தில் அங்கிருந்த யாருக்கும் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை சீக்கிரத்தில் சுதாரித்துக்கொண்டு சில இளைஞர்கள் அடிபட்டவர்களைஅப்புறப்படுத்த ஆரம்பித்தார்கள். மிச்சமிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள்.

கொஞ்ச நேரத்துக்குள் அடித்தவர்கள் மாயமாகக் காணாமல் போய்விட்டார்கள். புனிதச் சுவருக்கு முன்னால் இருந்த பகுதி ஒரு மினி போர்க்களம் போல் மாறியிருந்தது. சற்றும் எதிர்பாராத இந்தத் தாக்குதலால் ஏகப்பட்ட யூதர்களுக்குக் காயம் .

இங்கே மட்டு மில்லை பாலஸ்தீனம் முழுக்கவே யூதர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் கிடையாது.

ஒரு சின்ன வதந்தி கூடப் போதும் அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் நடுவே நெருப்புப் பற்றிக் கொண்டு விடும் அப்புறம் சண்டையில் எந்தப் பக்கம் எத்தனை உயிர் போகுமோ கணக்கே இல்லை.

*1929 ஒகஸ்ட் 23 ஆம்* திகதி யூதர்களின் புனித நகரங்களில் ஒன்றான ஹெப்ரானில் பெரிய கலவரம். ஐம்பதுக்கும் மேற்பட்ட யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தத் தகவல் அதிவேகத்தில் எல்லா நகரங்களுக்கும் பரவியது. இங்கே யூதர்கள் அரேபியர்களைக் கொல்கிறார்கள்.

அங்கே அரேபியர்கள் யூதர்களைக் கொல்கிறார்கள். இறந்து போனவர்களின் மொத்தக் கணக்கு நூறு, இருநூறு, ஐநூறு, ஆயிரம் என்று விதவிதமான வதந்திகள் பீதியூட்டிக் கொண்டிருந்தன.

இதனால் பாலஸ்தீனம் முழுக்கக் கலவரச் சூழல் யூதர்கள் பெரும்பான்மையாக வாழ்கிற தெருக்கள், ஏரியாக்கள் எல்லாவற்றிலும் வன்முறைவெடித்துக் கொண்டிருந்தது ஏகப்பட்ட உயிர்ச் சேதம், பொருள் சேதம்.

பதறிப்போன யூதர்கள் ஒரு முக்கியமான முடிவெடுத்தார்கள். இனிமே நாம தனித் தனியா சண்டை போடுவது சரிப்படாது நம்மைப் பாதுகாத்துக் கணும் என்றால் கும்பலாக மோதறது தான் புத்திசாலித்தனம். இல்லாட்டி இந்தப் பாலஸ்தீன மண்ணில யூதர்களோட அடையாளமே இல்லாதபடி அழிச்சுடுவாங்க

முதலில் நாம் ஏன் இத்தனை அடிவாங்குகிறோம்? பாலஸ்தீனர்களை எதிர்த்துப் போராட நமக்கு தைரியம் இல்லையா? அல்லது ஆள் பலம் ஆயுதம் இல்லையா?

எல்லாம் இருக்கிறது. ஆனால் அவர்கள் எப்போது அடிப்பார்கள் என்பது தான் நமக்குத் தெரியவில்லை. குடும்பத்தோடு நண்பர்களோடு ஜாலியாக ரிலாக்ஸ் செய்து கொண்டிருக்கும் போது பிரார்த்தனை செய்யும் போது ராத்திரி சாப்பாட்டுக்கு உட்கார்கின்ற நேரத்திலெல்லாம் எதிர்பாராமல் தாக்க ஆரம்பித்தால் நம்மால் என்ன செய்ய முடியும்?

ஆக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் அரேபியர்கள் மீது நிரந்தரமாக ஒரு கண் வைக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் கட்டையைத் தூக்கிக் கொண்டு அடிக்க வருவதற்கு முன்னால் நாமும் எதிர்த் தாக்குதலுக்குத் தயாராகிவிட வேண்டும்.

ஆனால் அரேபியர்களின் திட்டங்களை நாம் எப்படித் தெரிந்து கொள்வது?

கஷ்டம்தான் ஆனால் கொஞ்சம் மெனக்கெட்டால் நிச்சயம் முடியும்.

யூதர்கள் இதற்காக நிதி திரட்ட ஆரம்பித்தார்கள் அந்தப் பணத்தை எந்த வழிகளில் செலவு செய்யவேண்டும். யாரை எப்படிப் பயன்படுத்தி என்னென்ன தகவல்களைச் சேகரிக்கவேண்டும் என்றெல்லாம் தீவிரமான யோசனைகள் தொடங்கி. அவர்களுடைய முதல் உளவுத்துறை உருவாகி விட்டது. என்னதான் பாலஸ் தீனர்களுக்கும் யூதர்க ளுக்கும் சண்டைதான் பறந்தாலும் யூதர்கள் என்ன பாவம் செஞ்சாங்க?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 நிமிடங்களாக...

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் நேற்று உரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஒரு பாடத்தின் காலம் 45 நிமிடங்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு கற்பிக்க ஆசிரியருக்கு போதுமான நேரம் இருக்க வேண்டும், அதே நேரத்தில் மாணவர்கள் அவசரமின்றி இந்த நடவடிக்கைகளில் பங்கேற்க நேரம் தேவை," என்று பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரம்பத்தில் காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை பாடசாலைகளை இயக்க முன்மொழியப்பட்டதாக வெளிப்படுத்திய பிரதமர் அமரசூரிய, இறுதியில் பாடசாலை நேரத்தை அரை மணி நேரம் மட்டுமே நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

போக்குவரத்து போன்ற பிற சிக்கல்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7)

## ஓகஸ்ட் 10...

நடத்தப்படவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே அறிவித்துள்ளார்.

அதற்கான ஏற்பாடுகள் முறையாக நடைபெற்று வருகின்றன என்றும், பரீட்சை மத்திய நிலையங்கள், பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தொடர்பான வேலைத்திட்டங்கள் திட்டமிட்ட படி முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## புலமைப் பரிசில்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மிகவும் அழுத்தம்மிக்கது என்ற காரணத்தினால் அந்த அழுத்தங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் 2028ஆம் ஆண்டளவில் மிகவும் அதிக அழுத்தமற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை அறிமுகம் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாடசாலைகளுக்கு இடையில் நிலவி வரும் ஏற்றத்தாழ்வு நிலைமையினால் புலமைப்பரிசில் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு இடையில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ம-7)

## மூளாயில்...

யடுத்து நேற்றும் அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு குழுவினருக்கு இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட பதற்றநிலையை பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் பொலிஸ் பாதுகாப்பு தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு தனிநபர்களுக்கிடையிலான பிரச்சினை நேற்று முன்தினம் இரண்டு குழுவினருக்கு இடையேயான பிரச்சினையாக மாறியது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறையில் ஒரு மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் ஒரு மோட்டார் சைக்கிள் சேதப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சிலர் காயமடைந்தனர்.

இதன்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினத்திலிருந்து பலப்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு நேற்றும் தொடர்ந்தது. (ம-7)

## குற்றப் புல...

அகழ்வின் இரண்டாவது அமர்வு நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நேற்றைய அகழ்வின்போது, மேலும் 07 என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன.

ஏற்கெனவே இந்த பகுதியிலிருந்து 65 என்புக்கூட்டுத் தொகுதிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## மனிதப் புதைகுழி...

தனது அறிக்கையொன்றில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் என்பது இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளதுடன் அனைத்து சமூகங்களையும் பாதித்துள்ளது. குறிப்பாக தெற்கில் கிளர்ச்சி வடக்குக் கிழக்கில் ஆயுத மோதல்கள் குறித்த சூழமைவின் பின்னணியில், பல ஆண்டுகளாக பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்காக தொடர்ந்து குரல் கொடுப்பதில் குடும்பங்கள் ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளின் முக்கிய முயற்சிகளையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது.

பொருளாதார சவால்கள் மற்றும் பராமரிப்பு பொறுப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்களைச் சமாளிக்க வேண்டியிருந்த போதிலும் இலங்கையில் பலவந்தமாகக் காணாமலாக்கப்படுதல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்காக வாதிடவும் பெண்கள் முயற்சிகளை வழிநடத்தியுள்ளனர் என்பதை இது குறிப்பாக அங்கீகரித்தது

இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் வெளியிட்ட உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கை கடந்த கால விசாரணை ஆணையங்களால் 27000க்கும் மேற்பட்ட காணாமல் போனோர் வழக்குகள் பரிசீலிக்கப்பட்டன என்பதையும் காணாமல் போனோர் தொடர்பான 21000க்கும் மேற்பட்ட புகார்களை காணாமல்போனோர் அலுவலகம் பெற்றுள்ளது என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## புலிகளின்...

இராணுவத்தினரால் புனர்வாழ் வளிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றிரவு கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிபத்கொடை புதிய வீதியில் வைத்து பேலியகொடை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து T- 56 ரக துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குற்றச் செயல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் குறித்த நபர் துப்பாக்கியொன்றைத் தம் வசம் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத
திகதி 2025.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 5897
F 7 7 6 7 3 9
அத சம்பத: F 6 7 3 9
சீட்டிழுப்பு இலக்கம் 472

### சுப தவசக்
திகதி 2025.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 0013
சிம்மம் 02 04 23 53

### தன நிதானய
திகதி - 2025.07.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1927
S 15 17 26 35 S
Double Chance 31314

### மெகா பவர்
திகதி 21/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2245
N 12 40 42 53 61

### ஜய
திகதி 2025.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 0165
U 2 0 3 7

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4139
சீட்டிழுப்பு திகதி 21.07.2025
Z 32 37 76 80
Z

### ஹதஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 1206
தனுசு 04 15 25 26 தனுசு
தன யோக இலக்கம் 84803
04

### உத்தியோகபூர்வ முடிவுகள்
21.07.2025
வெற்றி வாரம் 0605
J 5 6 0 3 4 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,277,884.80

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2871
சீட்டிழுப்பு திகதி 2025.07.21
தினம் திங்கட்கிழமை
29 61 64 80 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,926,584.00

### சனிதா
திகதி 21.07.2025
வெற்றி வாரம் 5032
41 45 50 51 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,356,578.00
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/-

### ஜயோதா Jayoda
திகதி 2025.07.21
வெற்றி வாரம் 2145
12 24 35 48 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,561,115.20

### லக்ன
சீட்டிழுப்பு வாரம் 4583
சீட்டிழுப்பு திகதி 21.07.2025
தினம் திங்கட்கிழமை
03 05 52 55 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,511,621.60

### ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 23 28 37 59 65
2047
21.07.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.583,580,152.60

### அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2697
சீட்டிழுப்பு திகதி : 2025.07.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,154,682.40
34 47 55 70 S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 மனித எலும்பு...

செம்மணி மனித புதைகுழியின் 2 ம் கட்ட அகழ்வு பணி யாழ்ப்பாண நீத வான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வை யில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" என நீதிமன்றினால் அடையாளப் படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப் பட்டுள்ள நிலையில் முதல் 15 நாட்கள் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கடந்த 10ஆம் திகதியுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு 11 நாட்களின் பின்னர் நேற்று 16ஆவது நாளாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப் பட்டது அதன் போது இரண்டு மனித புதைகுழி களில் இருந்தும் 07 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றினை இன்று செவ்வாய்க் கிழமை அகழ்ந்து எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

அதேவேளை செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வு பணிகள் இது வரையில் கட்டம் கட்டமாக 25 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் போது, 65 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நேற்று முன்னெடுக் கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின் போது குற்றப்புலனாய்வுத் திணைக் கள அதிகாரிகள் அகழ்வு நடைபெறும் இடத்தில் பிரச்சன்னமாகி இருந்தனர்.

மனிதப்புதைகுழி தொடர்பான விசா ரணைகள் இதுவரை யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்ப ட்டு வந்த நிலை யில், பொலிஸ்மா அதிபரின் உத் தரவுக்கு அமைய, இந்த விசார ணைகளை மத் திய குற்றப் புல னாய்வுப் பிரிவின் கீழ் ஒப்படைக் கப்பட்டுள்ள நிலையிலேயே குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அகழ்வு இடம்பெறும் இடத்தில் பிர சன்னமாகி இருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-7,33)

## கோல் கம்பம்...

நாவாந்துறை பகுதியை சேர்ந்த யுவராஜ் செபஸ்தியாம்பிள்ளை (வயது 29) எனும் இளைஞனே உயிரிழந்துள் ளார்.

நாவாந்துறை சென் மேரிஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சக வீரர்களுடன் கால் பந்து விளை யாடிக்கொண்டிருந்த வேளை கோல் காப்பாளரான இளைஞன் மீது கம்பம் சரிந்து விழுந்துள்ளது.

அதில் படுகாயமடைந்த இளை ஞனை மைதானத்தில் நின்றவர்கள் மீட்டு, யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ம-7,60)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3474)

076 825 7716 (ஆகாஸ்)



**வீடு காணி விற்பனைக்கு**

சுழிபுரம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள 4 பரப்பில் உள்ள 3 அறைகள், சமையல் அறை, கோல், மலசலகூடம் தனிக் கிணறும் பெரிய மாட்டு மாலுடன் கூடிய வீடு வளவு விற்பனைக்கு உள்ளது.

076 711 8367
077 426 6598
(4861)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 2130/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3477)



சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்
**கூரைப் பொருட்கள் ஏலம்**

ஆலயத்தில் பயன்படுத்தி நல்ல நிலையில் உள்ள கூரை வளைகள், பனை மரங்கள், ஓடுகள் என்பன மூடிய கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. குறித்த பொருட்களை இன்று முதல் தினமும் காலை 7.00 மாலை 5.00 மணிக்கிடையில் பார்வையிட்டு மூடிய விலை மனுவினை 27.07.2025 மு.ப 8.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும். விலைமனுவிற்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 5,000.00.

மேலதிக விபரங்களுக்கு:
தர்மகர்த்தா
சபைக் காரியாலயம், சுதுமலை
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்.
(021 225 5222)
(C-3469)



**வேலைக்கு ஆட்கள் தேவை**

Ratnas(pvt) limited

இன் உடைய அச்சுவேலியில் இயங்கும் எமது உணவுப் பொருள் உற்பத்தி நிறுவனத்துக்கு

1. விற்பனைப் பிரதிநிதிகள் (50,000 மேல் சம்பளம் வழங்கப்படும்)
2. காசாளர்
3. சாரதி
} சம்பளம் நேர்முகத் தேர்வில் தீர்மானிக்கப்படும்

ஆகிய வெற்றிடங்கள் உள்ளன.
ஆர்வமுள்ள மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
076 096 4875
021 222 6554
(1352)



**சேல்ஸ்மன் தேவை**

எமது ஜவுளி நிறுவனத்துக்கு O/L படித்த அல்லது தொழில் பழக ஆர்வம் உள்ள பிடவை விற்பனையாளர் ஆண்/ பெண் தேவை. நேரில் வரவும்.
மதிய உணவுடன் கூடிய சம்பளம்.

சென்னை பெசன் வேல்ட்
63, வெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(4867)



**வேலைக்கு ஆட்கள் தேவை**
(ஆண்கள்)

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொலைபேசி இலக்கம்
076 916 7325
(4866)



**வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை**

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999, ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை.

077 041 3462, 077 408 8241
(C-3475)



**வெளிநாட்டில் (UK) இல் வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை**

1984, 1986, 1988(Divorce), 1990, 1992(02), 1993, 1993 (Divorce), 1996 (Divorce), 2001 ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை.

077 041 3462, 077 408 8241
(C-3475)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு 21.06.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் நாகமுத்து நவரத்தினம்**
(தொழிலதிபர் - நவரத்தினம் தச்சுத் தொழிலகம்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.07.2025) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நவரத்தினம் தச்சுத் தொழிலகம்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(C-3470)

இங்ஙனம்
குடும்பத்தினர்


இந்த வருடம் 2025 A/L இரசாயனவியல் பரீட்சையை நோக்கமாக கொண்ட செயலமர்வு

A/L PHYSICAL CHEMISTRY
Seminar (கருத்தரங்கு)
2025 & Repeat Batch மாணவர்களுக்காக...

July 30 ஆரம்பமாகவுள்ளது
Monday - Friday 4.00 - 5.30

இரசாயன சமநிலை
தாக்க இயக்கவியல் } 04 days
அயன் சமநிலை ——> 06 days
அவத்தை சமநிலை
மின் இரசாயன சமநிலை } 06 days

Full Theory & Paper discussion

Full seminar fees 2500/= only

Admissions free & limited
(4864)

Final exam இல் 20+ mcq, 1 st, 3 essay எனும் வரும் பகுதி Physical chemistry இல் தான் வினாக்களாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

Call for admissions ----> 076 230 6081

மிக எளிய முறையில் இலகுவாக முழுப்பாடமும் கற்பிக்கப்படும். உங்கள் A+ சித்திக்கு உறுதியாக அமையும்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org